நாள் 10.01.2023

<u>செய்தி வெளியீடு</u>

வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு வணிகர்களின் வியாபார தலங்களில், வணிகவரித்துறை அதிகாரிகளால் ஆய்வு மற்றும் தணிக்கை ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது.

இதில் ஆய்வு என்பது சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டப் பிரிவு 67ன் கீழ் வணிகர்களுக்கு எவ்வித முன் அறிவிப்பும் இன்றி அந்தந்த அதிகார எல்லைக்குட்பட்ட (Jurisdiction) இணை ஆணையர்களின் அங்கீகாரச் சான்றின் மூலம் உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும்.

களத்தணிக்கை என்பது சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டப் பிரிவு 65ன் கீழ் உரிய படிவத்தில் வணிகர்கள் / வணிக நிறுவனங்களுக்கு தெரிவித்த பின்னரே மேற்கொள்ளப்படும்.

மேலும், ஆய்வு / தணிக்கை தொடர்பாக வணிகவரித்துறையினரால் எவ்வித தொலைபேசி அறிவிப்பும் செய்யப்படுவதில்லை.

எனவே, ஆய்வு / தணிக்கை தொடர்பான நடவடிக்கை குறித்து வரும் தொலைபேசி தகவல்களை வணிகர்கள் நம்ப வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளியீடு
வணிகவரித்துறை ஆணையர் அலுவலகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை-600 005